7. இரண்டு காந்தங்கள் படத்தில் காட்டியுள்ளபடி வைக்கப்பட்டுள்ளன.

N S		N S

இவற்றுக்கு இடையே உள்ள விசை
a) மின்காந்த ஈர்ப்பு விசை   b) காந்த ஈர்ப்பு விசை
c) காந்த விலக்கு விசை   d) மேற்கூறிய மூன்று விசைகளுமே

8. சரியான வாக்கியம் எது?
a) புரோட்டன்களும் எலக்ட்ரான்களும் ஒன்றை ஒன்று விலக்கும்
b) நியூட்ரான்களும் எலக்ட்ரான்களும் ஒன்றை ஒன்று ஈர்க்கும்
c) நியூட்ரான்களும் நியூட்ரான்களும் ஒன்றை ஒன்று விலக்கும்
d) எலக்ட்ரான்களும் எலக்ட்ரான்களும் ஒன்றை ஒன்று விலக்கும்

9. கோடிட்ட இடத்தை நிரப்புக : (காரணம் தனியாக எழுத வேண்டியதில்லை)
a) பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரம் ________
b) சூரிய மண்டலத்திற்கு அருகில் உள்ள நட்சத்திரம் ________
c) மிக அதிக துணைக்கோள்களை கொண்ட கோள் ________
d) "சிவப்பு கிரகம்" எனப்படுவது ________
e) சூரிய கிரகணம் ஏற்படும் நாள் ________
f) இந்தியாவில் இருந்து நிலவுக்குச் சென்ற விண்கலம்
g) நட்சத்திரங்கள் கண்சிமிட்டக் காரணம் ________
h) பௌர்ணமியன்று கடல் சீற்றமடையக் காரணம் ________
i) சமீபத்தில் "கிரகம்" என்ற நிலையை இழந்தது ________
j) "பூமியின் இரட்டை" எனப்படும் கிரகம் ________

வேதியியல்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் காரணத்தை எழுதவும்.

1. குளுக்கோஸ் தூளை முகவையில் எடுத்துக் கொண்டு அதனுடன் நீர் சேர்க்கும்போது ஏற்படும் மாற்றம்.
a) வெப்ப உமிழ் மாற்றம்   b) வெப்பம் கொள் மாற்றம்
c) விரும்பத்தக்க மாற்றம்   d) மீள் மாற்றம்

2. சிறிதளவு வெப்பப்படுத்தும்போது தன் நிலையை மாற்றிக் கொள்ளாத பொருள்
a) பனிக்கட்டி   b) வெண்ணெய்   c) மெழுகு   d) மரம்

3. கீழ்கண்டவற்றுள் எது வேதிமாற்றம் அல்ல
a) அயோடின் துணுக்குகள் ஆவியாதல்
b) மின்சாரத்தை செலுத்தி நீரை ஹைடிரஜனாகவும் ஆக்ஸிஜனாகவும் பிரித்தல்
c) ஹைட்ரஜனும், குளோரினும் சேர்ந்து ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை உருவாக்குதல்.
d) ஹைட்ரஜன் காற்றில் எரிந்து நீராகுதல்.

4. அமில மழையை உருவாக்கும் ஆக்சைடு
a) கார்பன் மோனாக்சைடு (CO)   b) நைட்ரஜன்-டை-ஆக்சைடு (NO_2)
c) பாஸ்பரஸ் பென்டாக்சைடு (P_2O_5)   d) கார்பன்-டை-ஆக்சைடு (CO_2)

5. கீழ்கண்டவற்றின் வேதிப்பெயர் என்ன? (காரணம் தேவையில்லை)
a) ரொட்டி சோடா ________
b) சலவை சோடா ________
c) சுண்ணாம்புக்கல் ________
d) சர்க்கரை ________

6. ரூதர்போர்டு பரிசோதனையில் அணுவின் மையப்பகுதி நேர்மின் சுமை கொண்டது என்பதை வெளிப்படுத்தியவை :
a) ஊடுருவிச் சென்ற ஆல்ஃபாக் கதிர்கள்
b) சிறிதளவு விலக்கம் அடைந்த ஆல்ஃபாக் கதிர்கள்
c) அதிக அளவு விலக்கம் அடைந்த ஆல்ஃபாக் கதிர்கள்
d) 180^0 கோண அளவில் திரும்பிய ஆல்ஃபாக் கதிர்கள்

7. யுரேனியத்தின் நிறை எண் 238. அதன் அணு எண் 92 எனில் அதில் உள்ள புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களின் எண்ணிக்கை.
a) 92, 92   b) 146, 92   c) 92, 146   d) 238, 92

8. பேரியம் ஆக்ஸைடின் வேதிக்குறியீடு
a) BaO   b) BO   c) BaO_2 d) Ba_2O

9. கோடிட்ட இடங்களை நிரப்புக (காரணம் தனியாக எழுத வேண்டியதில்லை)
a) தங்கத்தின் வேதியியல் குறியீடு ________
b) Na என்ற குறியீட்டைப் பெற்ற தனிமம் ________
c) அணுவின் இறுதிச் சுற்றிலுள்ள எலக்ட்ரான்கள் ________ எலக்ட்ரான்கள்
d) இரும்புத் துகளும் அலுமினியத்துகளும் கலந்த கலவையைப் பிரித்தெடுக்க ________ பயன்படுத்தலாம்.